காதுக் குண்டலத்தின் ஒளியை வாங்கி, உமிழ்ந்து இந்திரவில் போல் மின்னி மிளிர, அன்பு பெருகி நெஞ்சுருகி நின்றாள்; பகைவர்க்கு அச்சந்தரும் வேல்போலும் வடிவுடைய, இன்பூட்டும் எழிற் கண்ணுடைய சுரமஞ்சரி.

எரிமணிக் கலாபத் திட்ட இந்திர நீல மென்னும்
ஒருமணி யுந்தி நேரே ஒருகதிர் உமிழ்வ தேபோல்
அருமணிப் பூணினாள்தன் அங்வயி றணிந்த கோலத்
திருமயி ரொழுக்கம் வந்தென் திண்ணிறை கவர்ந்த தன்றே. 2061

(எரிமணிக் கலாபம்-ஒளி விளங்குகின்ற மணிகளையுடைய மேகலை; உந்தி-கொப்பூழ்)

தேறினேன் தெய்வ மென்றே தீண்டிலே னாயி னுய்யேன்
சீறடி பரவ வந்தே னருளெனத் தொழுது சேர்ந்து
நாறிருங் குழலி னாளை நாகணை விடையிற் புல்லிக்
கோறொடுத் தநங்கன் எய்யக் குழைந்துதார் திவண்ட தன்றே. 2062

(நாகு அணை விடையின்-பசுவை அணைந்த ஏறுபோல; கோல்-மலரம்பு; திவண்டது-வாடியது)

கலைபுறஞ் சூழ்ந்த அல்குல் கார்மயிற் சாய லாளும்
மலைபுறங் கண்ட மார்பின் வாங்குவிற் றடக்கை யானும்
இலைபுறங் கண்ட கண்ணி இன்றமி ழியற்கை யின்பம்
நிலைபெற நெறியிற் றுய்த்தார் நிகர்தமக் கிலாத நீரார் 2063

(கலை-மேகலை; மலைபுறம் கண்ட-மலையைத் தோற்கச் செய்த; துய்த்தார்-நுகர்ந்தார்)

ஒளிவீசும் மணிகள் நிறைந்த மேகலையில் வைத்துப் பதித்த இந்திர நீலமணி உந்திச் சுழிக்கு நேராக நின்று கதிர் வீசுவதைப் போல, அழகிய மணியணிகள் புனைந்த-அவளுடைய வயிற்றை அழகு செய்து நின்ற மயிரொழுங்கு வந்தென் மனத்

திண்மையைக் கவர்ந்தது என்று சீவகன் வியந்து நிற்க; நின்னைத் தெய்வமென்றே தெரிந்தேன், உன்னுடல் தீண்டாமல் நான் உயிர் வாழேன், உன் அழகிய திருவடி பணிந்து வாழவே வந்தேன்; அருள்புரிவாய் என்று வணங்கி நெருங்கிச் சேர்ந்து மன்மதன் மலரம்பு எய்தலால், மணமுடைய கருங் கூந்தலுடையவளைப் பசுவினைத் தழுவி அணையும் காளையைப் போல் சீவகன் தழுவி அணைத்தான். இறுகிய முயக்கால் அவனணிந்த மாலை வாடி வதங்கியது. மேலே அழகிய ஆடை அணிந்த அல்குலுடைய, கார்காலங் கண்டு தோகை விரித்தாடும் மயில் போன்ற சாயல் உடைய சுரமஞ்சரியும்; தழை நிறைந்த முடிக்கண்ணி சூடிய, மலையைப் பழிக்கும் திரண்ட மார்பும், அகன்ற கையும் உடைய சீவகனும்; இனிய தமிழ் கூறும் இயற்கை புணர்ச்சி இன்பத்தை முறையோடு துய்த்துத் தமக்கெவரும் நிகரில்லாத தன்மை பெற்றனர்.

குங்குமங் குயின்ற கொம்மைக் குவிமுலை குளிர்ப்பத்
தைவந்து
அங்கலுழ் மேனி யல்குல் காசுடன் றிருத்தி யம்பொற்
பொங்குபூஞ் சிலம்பிற் போர்த்த பூந்துக ளவித்து மாதர்
கொங்கலர் கோதை சூட்டிக் குழனலந் திருத்தி னானே 2064

(குங்குமம் குயின்ற-குங்குமச்சாந்தைப் பூசிய; கொம்மை - பெருமை, வட்டமுமாம்; தைவந்து-தடவி; துகள்-தூசு)

(வேறு)

வானார் கமழ்மதுவுஞ் சாந்து மேந்தி மதுத்துளித்து வண்டும்
சுரும்பும் மூசும்
தேனார் பூங்கோதாய் நினக்குக் காமன் சிலையிரண்டுஞ்
செவ்வனே கோலித் தந்தான்
தானாரப் பண்ணித் தடறு நீக்கித் தண்குருதி தோய்த்
தகைமை சான்ற
ஊனார்ந்த வேரிணை யம்புந் தந்தா னென்னை யுளனாக
வேண்டினானே 2065

(மூசுதல்-மொய்த்தல்; ஆர்தல்-உண்ணுதல்; கோலி - வளைத்து; தடறு-உறை; ஊன்-மாமிசம்)

கண்ணக்க கண்ணிக் கமழ்பூங்குழற் கரும்பேர் தீஞ்சொலாள்
கதிர்மு லைகளின்
வண்ணக்கு வானு நிலனு மெல்லாம் விலையே மழைமின்னு
நுசுப்பி னாளைப்
பெண்ணுக் கணியாக வேண்டி மேலைப் பெரியோர்
பெருமான் படைத்தா னென்று
புண்ணக்க வேலான் புகழ நாணிப் பூநோக்கிப் பூக்கொசிந்த
கொம்பொத் தாளே 2066

(கள் நக்க கண்ணி - தேனைச் சிந்தவிட்ட பூமாலை; வண்ணக்கு-வண்ணத்துக்கு, அழகுக்கு)

குங்குமக் குழம்பு பூசிப் பருத்துக் குவிந்த மார்பு குளிரத் தடவி அழகொழுகும் மேனி தொட்டு அல்குல் தழுவிய மேகலைக் காசுகள் திருத்தி, ஒலிக்கும் பாதச் சிலம்பில் படிந்த பூ மகரந்தப் பொடிகளைத் துடைத்து, சுரமஞ்சரிக்குத் தேன் வழியும் புது மலர் மாலை சூட்டி சரிந்த அவள் கூந்தலையும் சீவகன் திருத்தி விட்டான். பிறகு மிக உயர்ந்த தேனும் சாந்தமும் நிறைந்து படிந்த மலர்களில் துளிர்க்கும் தேனினை உண்ண, தும்பியும் வண்டும் வந்து மொய்க்கும் மலர்மாலை அணிந்தவளே! உனக்கு காமவேள் தன் கைவில்லையும் சேமவில்லையும் வளைத்து அழகிய புருவமாய் அமைத்துத் தந்திருக்கிறான். அல்லாமல் அவன் தான் தாழ்வடைய, பசிய செங்குருதி சேர்த்து, அழகோடு கூட்டிச் சதையாலமைத்த இரண்டு கண்களை கூரம்புகளாக உனக்குத் தந்திருக்கின்றான். இத்தோடு நில்லாமல் என்னையும் அக் கூரம்புக்கு இலக்காக்கி இருக்கிறான். தேன் சிதறும் பூமாலையும், வாசநெய் மணக்கும் பூ முடித்த கருங்கூந்தலும் கரும்பைப் போல் இனிக்கும் அழகிய சொல்லும் உடையவளே; ஒளிவீசும் உன் பூமார்பின் அழகுக்கு இவ்விண்ணும் மண்ணும்

ஈடாகுமோ? மழையிடை நெளியும் மின்னல் போலும் இடை உடைய உன்னை, பெண்ணினத்தின் லட்சியமாக இருக்க விரும்பி முன்னாள் மூத்தோர் தலைவனாகிய பிரமன் படைத்திருக்கிறான் என்று; பகைவர் உடலைப் புண்செய்யும் வேலான் புகழ்ந்து போற்றினான். குவளை மலர் போலும் கண் விழித்து நோக்கும் சுரமஞ்சரி அதுகேட்டு வாடிய மலர்க் கொடி போல் நாணி நின்றாள்.

(வேறு)

இறங்கிய மாதர் தன்னை யெரிமணிக் கடகக் கையாற்
குறங்கின்மேல் தழுவி வைத்துக் கோதையங் குருதி வேலான்
அறந்தலை நீங்கக் காக்கு மரசன்யா னாக நாளைச்
சிறந்தநின் னலத்தைச் சேரே னாய்விடிற் செல்க வென்றான் 2067

(இறங்கிய மாதர் தன்னை-நாணங் கொண்ட சுரமஞ்சரியை; குறங்கு-துடை; அறம் தலை நீங்கக் காக்கும் அரசன்-தருமம் தன்னிடத்தினின்றும் நீங்கும்படியாக உலகைக் காவல் செய்கின்ற கட்டியங்காரன்)

வில்லிடு மணிசெ யாழி மெல்விரல் விதியிற் கூப்பி
நல்லடி பணிந்து நிற்ப நங்கைநீ நடுங்க வேண்டா
செல்கெனச் சிலம்பு செம்பொற் கிண்கிணி மிழற்ற வொல்கி
அல்குற்கா சொலிப்ப யம் பாவைசென் றெய்தி னாளே 2068

(வில்லிடுமணிசெய் ஆழி-ஒளிவிடுகின்ற மணியாற் செய்த மோதிரத்தையுடைய; ஆயம்-தோழியர் கூட்டம்)

பருமணிப் படங்கொள் நாகப் பையெனப் பரந்த அல்குல்
எரிமணிப் பூணி னாலுக் கின்னல மொழிய ஏகித்
திருமணிச் சிவிகை யேறிச் செம்பொனீண் மாடம் புக்காள்
விரிமணி விளங்கு மாலை வெம்முலை வேற்க ணாளே 2069

(பை-படம்; நலம் ஒழிய-அன்பு நிற்க; சிவிகை-பல்லக்கு)

அப்படி நாணி நின்ற சுரமஞ்சரியை, ஒளி விளங்கும் மணிகள் பதித்த பொற் கடகம் அணிந்த கையால் தழுவித் தன் மடிமீதிருத்தி மாலை அணிந்த - குருதிக் கறை படிந்த வேலுடைய சீவகன் கூறினான்! அறநெறி தவற அரசாளும் கட்டியங்காரன் ஆவேன்-நாளை மீண்டும் வந்து நானுன் இன்பநலம் நுகராமல் போவேனேயானால், எனவே நீ இப்போது செல்க என்று போகவிட்டான். ஒளிவீசும் மணிக்கற்கள் பதித்த மோதிரம் அணிந்த மெல் விரல்களைக் கூட்டிக் கரங்கூப்பி அவளும் திருவடி பணிந்து நிற்க, சீவகன், பெண்ணே! நீ வருந்தாது செல்க என்றான். பாதச் சிலம்பிசைக்க, செம்பொன் கிண்கிணி பாட, மேகலைக் காசொலிக்க ஆடி நடந்து சுரமஞ்சரியும், தோழியர் கூட்டத்தை அடைந்தாள். பெரிய நாக மணியைத் தலையிலே கொண்ட பாம்பின் படம்போலப் பரந்த அல்குலும், மிக்க பேரொளி வீசும் மணிமாலையும், விம்மிப் புடைத்த பூமார்பும் வேல் போலும் கண்ணும் உடைய சுரமஞ்சரி; ஒளிவீசும் பொற்பூண் அணிந்த சீவகன் பால் அன்பு வைத்து, அழகிய மணிச் சிவிகையிலேறி பொன்னாலான நீள்மாட மாளிகையை அடைந்தாள்.

திருவிற்றான் மாரி கற்பான் துவலைநாட் செய்வ தேபோல்
உருவிற்றாய்த் துளிக்குந் தேற லோங்குதார் மார்பன் தோழர்
பொருவிற்றா னம்பி காம திலகனென் றிருந்த போழ்திற்
செருவிற்றாழ் நுதலி னாள்கண் மணத்திறஞ் செப்பு கின்றாா். 2070

(உருவிற்றாய்-வடிவுடையதாய்; துவலை-துளி)

கனைகட லமுதுந் தேனுங் கலந்துகொண் டெழுதப் பட்ட
புனைகொடி பூத்த தேபோற் பொறுக்கலா நுசுப்பிற் பாவை
நனைகுடைந் துண்டு தேக்கி நன்மணி வண்டு பாடும்
புனைகடி மாலை மாதா் திறத்திது மொழிந்து விட்டார். 2071

(கனைகடல் - ஒலிக்கின்ற கடல்; நனை-அரும்பு; தேக்கி - வயிற்றை நிறைத்து; கடி-வாசனை; திறத்து-உறவினரிடத்து)

ஐயற்கென் றுரைத்த மாற்றங் கேட்டலு மலங்க னாய்கன்
வெய்யதேன் வாய்க்கொண் டாற்போல் விழுங்கலோ
டுமிழ்தல் தேற்றான்
செய்வதெ ன்நோற்றி லாதே னோற்றிலா ள்திறத்தி னென்று
மையல்கொண் டிருப்ப வப்பாற் குமரிதன் மதியிற் சூழ்ந்தாள். 2072

(மாற்றம் - வார்த்தை; வெய்ய தேன்-வெப்பத்தையுடைய தேனை; மையல்-மயக்கம்)

அழகிய வானவில் மழைபொழிய கற்பதற்கு நீர்த் துளியைப் வாங்கிக் கொள்வது போன்ற வடிவுடைய தேன் துளிர்க்கும் மலர்மாலை அணிந்த வீங்கு புகழ் மார்புடைய சீவகன் தோழர் எல்லாம், நாம் காம திலகன் என்று போற்றத் தகுந்தவனே சீவகன் என்று மகிழ்ந்திருந்த போதில், போருக்குரிய வில்லையும் பழிக்கும் புருவமுடைய சுரமஞ்சரியிடம் மணவினை பற்றிப் பேசலானார்கள். ஒலிக்கும் கடலில் கிடைத்த அமுதும் தேனும் ஒன்றாகக் கலந்து எழுதிய அழகிய பூங்கொடி, இருமலர் பூத்ததே போல் உள்ள மார்பிரண்டையும் தாங்க இயலாத சிற்றிடை உடைய பெண்கள், மலரைக் குடைந்து தேனைப் பருக வயிறு நிறைந்த நீலமணி போலும் வண்டுகள் மொய்த்துப் பாடும், வாசமலர் மாலையணிந்த சுரமஞ்சரியின் சுற்றத்தாரிடம் மணத்தினைப் பற்றி பேச தக்காரை அனுப்பினர். சீவகனுக்குச் சுரமஞ்சரியை மண முடித்துத் தரவேண்டும் என்று கூறி அவ்வார்த்தையினைக் கேட்ட அழகிய மாலையணிந்த குபேரதத்தன் - சுரமஞ்சரியின் தந்தை - சூட்டோடு வாயில் ஊற்றிய தேனை உள்ளே விழுங்கவும் முடியாது. வெளியே உமிழவும் முடியாது திகைப்பதைப் போல; அத்திருமணத்துக்கு உடன்படவோ, மறுக்கவோ முடியாமல், நல்வினை இல்லாத

அவளுக்காக நல்வினையில்லாத நான் என் செய்வேன் என்று சிந்தை தடுமாறி நின்றபோது, மற்றோர் பக்கம் சுரமஞ்சரி தன் அறிவால் அறவழி நிற்பதை எண்ணியபடி இருந்தாள்.

பொற்பமை தாமக் கந்து பொருந்திய மின்னுப் போல
எற்பக வெரியு மாலைப் பவளத்தூண் பொருந்தி யின்னீக்
கற்பெனு மாலை வீசி நாணெனுங் களிவண் டோப்பிச்
சொற்புக ரின்றித் தோழிக் கறத்தினோ டரிவை நின்றாள். 2073

(பொற்பு-அழகு; தாமக்கந்து-மாலையையுடைய தூணை; எல்பக எரியும்-சூரியன் தோற்கும்படி ஒளிவிளங்குகின்ற; ஓப்பி-ஓட்டி; சொற்புகர்-சொற்குற்றம்)

வழிவளர் மயிலஞ் சாயற் பவழப்பூம் பாவை யன்ன
கழிவளர் கயற்க ணங்கை கற்பினை யறிந்து தோழி
அழிமது மாலை சேர்த்தி யடிபணிந் தார வாழ்த்திப்
பொழிமதுப் புயலைங் கூந்தற் செவிலியைப் பொருந்திச்
சொன்னாள். 2074

(கழிவளர்கயல் - உப்பங்கழியில் வளர்ந்த கயல்மீன்; அழிமது - ஒழுகுகின்ற தேனையுடைய)

நனைவளர் கோதை நற்றாய் நங்கைக்கீ துள்ள மென்று
சுனைவளர் குவளை யுண்கட் சுமதிக்குச் செவிலி செப்பக்
கனையிருட் கனவிற் கண்டேன் காமர்பூம் பொய்கை வற்ற
அனையதாங் கன்னி நீரின் றற்றதா நங்கைக் கென்றாள் 2075

(நனை-அரும்பு; தேன் எனலுமாம். கனைஇருள்-மிக்க இருளிடத்து)

அழகுமிக்க மாலை பொருந்திய தூணோடு சேர்ந்து நின்ற மின்னலைப் போல; சூரிய ஒளி கெட விளங்கும் மணிமாலை தொங்கும் பவளத்தூணைப் பொருந்தி நின்று, இனிய கற்பு என்னும் மாலையை வீசி, நாணம் என்னும் கருவண்டை ஓட்டி சொற்குற்றம் நேராது சுரமஞ்சரி தோழியொடு அறவழியில்

நின்றாள். வழி வழியாக வந்த அறவழியில் வளர்ந்த மயில் போலும் அழகிய சாயலுடையவளும் - பவளத்தாலாக்கிய பாவை போன்ற - உப்பங்கழியில் வளர்ந்த மீன்போலும் கண்ணுடைய வளுமாகிய - சுர மஞ்சரியின் கற்பினைத் தோழி அறிந்து, தேன் வழியும் மலர் மாலையை அவளுக்கு அணிவித்து, அடிபணிந்து வாழ்த்தினாள். தேன் வழியும் கார்முகில் போன்ற ஐம்பால் கூந்தலுடைய அத்தோழி சுரமஞ்சரியின் செவிலித்தாயை அடைந்து, அவளிடம் சுரமஞ்சரி அறத்தொடு நின்றதை அறிவித்தாள்.

தேன் வழியும் மலர்மாலை அணிந்த நற்றாயே! சுரமஞ்சரியின் உள்ளக் கருத்தும் நிலையும் இதுவாகும் என்று, சுனையிலே பூத்த குவளை மலர்போலும் மையுண்ட கண்ணுடைய சுமதிக்குச் செவிலித்தாய் சென்று கூறினாள். அதுகேட்ட நற்றாய் சுமதி, நள்ளிரவில் நான் கனவில் அழகிய மலர்ப் பொய்கையில் ஒன்று வற்றக் கண்டேன். அது சுரமஞ்சரிக்குக் கன்னித்தன்மை நீங்கிய இதையே குறித்தது போலும் என்றாள்.

கெண்டையுஞ் சிலையுந் திங்க ளிளமையுங் கிடந்து தேங்கொள்
தொண்டையங் கனியு முத்துந் தொழுதக அணிந்து தூங்கும்
குண்டல முடைய திங்க ளிதுவெனு முகத்தி தாதை
வண்புகழ்க் குபேர தத்தன் கேட்டனன் மனைவி சொன்னாள் 2076

(தூங்கும்-தொங்குகின்ற; தாதை-தந்தை; தேங்கொள் - இனிமை கொண்ட)

செருவிளைத் தனலும் வேலோய் சிறுமுதுக் குறைவி தானே
பெருவளைப் பிட்டுக் காத்த கற்பிது போலு மைஐயன்
கரிவிளைத் தாய்ந்த சுண்ணம் வாட்டின னென்று கண்டாய்
திருவிளை தேம்பெய் மாரி பாற்கடல் பெய்த தென்றாள் 2077

(வளைப்பு-காவல்; கரி-சான்று; தேம்பெய்-தேன்பெய்யும்)

கேட்பது விரும்பி நாய்கன் கிளைக்கெலா முணர்த்தி யார்க்கும்
வேட்பன அடிசி லாடை விழுக்கலன் மாலை சாந்தம்
கோட்குறை வின்றி யாக்கிக் குழுமுஇயங் கறங்கி யார்ப்ப
நாட்கடி மாலை யாற்கு நங்கையை நல்கி னானே 2078

(கிளை-சுற்றம்; வேட்பன-விரும்பப்படுவனவாகிய; கோட் குறைவின்றி-கொள்ளுதலிற் குறைபாடில்லாமல்; குழுமு இயம்-கூடிய வாத்தியங்கள்)

கெண்டை மீன் போன்ற கண்களும், வில்போன்ற புருவமும், பிறைநிலவு போன்ற நெற்றியும், அமைந்து, தேன்போல் இனிக்கும் கொவ்வைக் கனியிதழும், முத்துப் பற்களும் நிறைந்து; தொங்கும் காதுக் குண்டலம் அணிந்த முழுமதி போன்ற முகமுடைய சுரமஞ்சரியின் தந்தையாகிய குபேரதத்தன் அவன் மனைவி சுமதியிடம் சென்று கேட்க அவள் கூறுவாள்: போர் விளைத்து முழங்கும் வேலுடையவனே, சிறு பருவத்திலேயே, பேரறிவு பெற்ற சுரமஞ்சரி தானே பெரிதும் காவல் செய்து காத்துக் கொண்டதாகிய இக்கற்பு, முன்பு சீவகன் சான்று காட்டித் தன் சுண்ணத்தைத் தாழ்ந்தது என்று கூறியதை எண்ணிக் காவல் செய்து கொண்டது போலும்! என்றாலும் அக்காவலும் கற்பு நோன்பும் இப்போது, செல்வம் பொங்கப் பொழிகின்ற தேன்மாரி பாற்கடலில் பெய்தது போலாயிற்று என்றாள். குபேரதத்தன் இதை மகிழ்வோடு கேட்டு, தன் சுற்றத்தார்க்கெல்லாம் அறிவித்து, விரும்பி வரும் யாவர்க்கும் உணவும், உடையும், பொற்பூணும், பூமாலையும், சந்தனமும், குறைவின்றி கொள்ளக் கொடுத்து; பலவித மங்கல வாத்தியங்களும் கூடி ஒலிக்க, நல்லதோர் நாளிலே; மணமிக்க மாலையணிந்த சீவகனுக்கு-சுரமஞ்சரியை மணம் முடித்துக் கொடுத்தான்.

பரியகஞ் சிலம்பு பைம்பொற் கிண்கிணி யார்ந்த பாதத்
தரிவைய ராடன் மிக்கா ரருமணி வீணை வல்லார்
உரியநூற் றெண்மர் செம்பொ னொன்றரைக் கோடி மூன்றூர்
எரியழன் முன்னர் நேர்ந்தே ன்னென்மகட் கென்று சொன்னான்.
2079

(பரியகம்-காற்சரியென்னும் ஆபரணம்; நேர்தல் கொடுத்தல்)

மாசறு மணியு முத்தும் வயிரமு மொளிரு மேனி
ஆசறு செம்பொ னார்ந்த அலங்கலங் குன்ற னானும்
தூசுறு பரவை அல்குற் றூமணிக் கொம்ப னாளும்
காசறக் கலந்த வின்பக் கடலகத் தழுந்தி னாரே. 2080

(தூசு-ஆடை; ஆசற-குற்றமற்ற)

பொன்வரை பொருத யானைப் புணர்மருப் பனைய வாகித்
தென்வரைச் சாந்து மூழ்கித் திரள்வடஞ் சுமந்து வீங்கி
மின்வளர் மருங்குல் செற்ற வெம்முலை மணிக்கண் சேப்பத்
தொன்னலம் பருகித் தோன்ற துறக்கம்புக் கவர்க ளொத்தான். 2081

(சேப்ப-சிவப்ப; வீங்கி-பருத்து; மருங்குல்-இடை; செற்ற-வருத்திய)

காற்சரியும், சிலம்பும் பசும்பொன் கிண்கிணியும் அணிந்த காலுடைய பெண்கள், ஆடல் வல்லவர்-அழகு மணிகளிழைத்த யாழில் வல்லவர் ஆகிய சிறந்த நூற்றியெட்டு பெண்களும், ஒன்றரைக் கோடிப் பொன்னும், மூன்று ஊர்களும் என் மகளுக்கு எரிநெருப்பின் முன்னே சீதனமாகத் தந்தேன் என்று குபேரதத்தன் கூறினான். களங்கமில்லாத மணியும், முத்தும், வயிரமும் ஒளி விடும் மேனியில்; தூய சிவந்த பொன்னாலான மாலையணிந்த, நறும் பொற்குன்று போன்றவனும், அழகிய ஆடை அணிந்த பரந்த அல்குலுடைய எழில் மணிக்கொடி போன்றவளும் குற்றமறக் கூடி இன்பக் கடலில் அழுந்தினர். பொன் மலையோடு போர் செய்த யானையின் தந்தக் கொம்பு போன்றதாய், பொதிய மலைச் சந்தனக் குழம்பிலே தோய்ந்ததாய், நிறைய முத்துச் சரஞ்சுமந்து பருத்த, மின்னல் கொடிபோன்ற இடையை வருத்தும் பருத்த மார்பின் கருமணிக் கண்கள் சிவக்க; மிக்க

பேரின்பம் நுகர்ந்து சீவகன் சொர்க்க வாழ்வு பெற்றவன் ஆனான்.

வரிக்கழற் குருசின் மார்பு மடந்தைவெம் முலையும் தம்முட்
செருச்செய்து திளைத்துப் போரிற் சிலம்பொலி கலந்த பாணி
அரிப்பறை யனுங்க ஆர்க்கு மேகலைக் குரலோ டீண்டிப்
புரிக்குழல் புலம்ப வைகிப் பூவணை விடுக்க லானே 2082

(வரி-கீற்று; பாணி-தாளம்; அனுங்க-கெட; ஈண்டி-ஈண்ட, நெருங்க; வைகி-தங்கி)

மணியியல் வள்ளத் தேந்த மதுமகிழ்ந் தனந்தர் கூர
அணிமலர்க் குவளைப் பைம்போ தொருகையி னருளி யம்பொற்
பிணையனா ளருகு சேரிற் பேதுறு நுசுப்பென் றெண்ணித்
துணையமை தோள்க ள்தம்மாற் றோன்றல்தான் புல்லி னானே 2083

(வள்ளம்-கிண்ணம்; துணை அமை-ஒப்பில்லாத; அனந்தர்-மயக்கம்; பேதுறும்-துன்புறும்)

மல்லலங் கங்கை போலும் பலர்முயங் கார மார்பிற்
புல்லன்மின் போமின் வேண்டா என்றவள் புலந்து நீங்க
முல்லையங் கோதை யொன்றும் பிழைப்பிலேன் முனிய னீயென்று
அல்லலுற் றரத்த மார்ந்த சீறடி தொழுதிட் டானே 2084

(புலந்து-ஊடல் கொண்டு; ஒன்றும்-சிறிதும்; பிழைப்பு - தவறு)

வரியுடைய கழல் அணிந்த சீவகன் மார்பும், சுரமஞ்சரியின் பருத்த முலையும், தம்முள் போரிட்டு, அப்போரிலே திளைத்து; சிலம்பும் தாளத்தோடொலிக்கும் பறையோசை கெட, முறுக்கிய கூந்தல் கலைந்து மேகலையும் சேர்ந்தொலிக்க, இன்பந் துய்த்தான். குலையவும் பஞ்சணையை விடாதவனாய்

பின்னர் மணிகள் இழைத்த பொற்கிண்ணத்திலே மதுவை ஏந்திக் கொடுக்க அவள் அதனைப் பருகி மகிழ்ந்து மயக்கங் கொள்ள, அழகிய குவளை மலரை ஒருகையால் அவள் கூந்தலுக்குத் தந்து பொன் மான் போன்ற அவளை இறுகத் தழுவினால் அவள் இடைமுறியும் என்று நினைத்துத் தன் அழகிய தோள்களால் அணைத்து மார்புறத் தழுவிக் கொண்டான். வளமிகு கங்கை போல பலரும் பல முகமாகத் தழுவும் மார்பினால் (என்னை இப்போது மார்புறத் தழுவாததனால்) என்னை இனித் தழுவ வேண்டா; தொடாமல் போய்விடுக என்று கூறி அவள் ஊடி ஒதுங்க; அவன் முல்லை மலர் மாலை அணிந்தவளே! நான் ஏதும் பிழை செய்யவில்லை, என்னைக் கோபிக்காதே என்று, வருந்தி செக்கச் சிவந்த அவள் சிற்றடிகளைப் பணிந்தான்.

வட்டிகைப் பாவை நோக்கி மகிழ்ந்திருந் திலிரோ என்னாத்
தொட்டிமை யுருவந் தோன்றச் சுவரையே பொருந்தி நின்றாய்
கட்டழ குடைய நங்கை நீயெனக் கருதிக் கண்ணான்
ஒட்டியா னோக்கிற் றென்றா னொருபிடி நுசுப்பி னாட்கே.
2085

(வட்டிகைப்பாவை-வட்டிகையால் எழுதிய பாவைபோல் வாள்; என்னா-என்று; நோக்கிற்று-நோக்கியது)

நுண்டுகி ல்நெகிழ்ந்த வல்குன் மணிபரந் திமைப்ப நொந்து
கண்களை யிடுகக் கோட்டிக் காமத்திற் செயிர்த்து நோக்கிக்
குண்டல மிலங்கக் கோதை கூந்தலோ டவிழ்ந்து சோர
ஒண்டொடி யூடி நின்றா ள்ளிமணிப் பூங்கொம் பொப்பாள்
2086

(மணி-மேகலையிற் கட்டிய மணிகள்; இடுகக் கோட்டி - சுருங்கப் பார்த்து; செயிர்த்து-கோபித்து)

கிழவனாய்ப் பாடி வந்தென் கீழ்ச்சிறை யிருப்பக் கண்டேன்
எழுதிய பாவை நோக்கி யிமைஅவித் திருப்பக் கண்டேன்
ஒழிகவிக் காம மோரு ரிரண்டஃக மாயிற் றென்றாங்கு
அழுதகண் ணீர்கண் மைந்த னாவிபோழ்ந் திட்டவன்றே.2087

(சிறை-காவலிடம்; எழுதிய-எழுதும் பொருட்டு; அஃகம் - முறைமை)

வட்டிகையால் சுவரில் எழுதிய ஓவியப் பாவையை நோக்கி நீர் மகிழ்ந்திருந்தீரோ என்று கேட்ட, பிடி அளவே இடை உடைய சுரமஞ்சரிக்கு; பாவையும் நீயும் ஒன்றுபோல் தோன்ற நீ சுவரோடு பொருந்தி நின்றனை. அவ்வுருவம் மிக்க பேரழகுடைய நீயே என்று நான் நினைத்துக் கண்ணாலே ஒப்பு நோக்கினேன், என்று கூறியும் கேளாது மெல்லிய ஆடை நெகிழ்ந்து, அல்குலின் மேலணிந்த மேகலையின் ஒளி பரவ வருந்தி; கண்களைச் சுருக்கிப் பார்த்து, காமத்தால் சினந்து நோக்கி; குண்டலம் ஆடக் கூந்தல் கலைந்து மாலை அவிழ, அழகிய வளையல் அணிந்த, ஒளிமிக்க மணிக் கொடி போன்றவள் அவனோடு ஊடி நின்றாள். கிழவனைப் போல் உருக் கொண்டு நீர் என் காவல் மாளிகையில் வந்து பாடியிருப்பதைக் கண்டேன். சுவரில் தீட்டிய சித்திரத்தை நோக்கி இமையாமல் இருப்பதையும் பார்த்தேன். ஓர் ஊரில் இரு வழக்கு நிகழ்ந்தது. அதாவது அன்று நான் மிகவும் விரும்பப்பட்டேன். இன்று இதே இடத்தில் என்னைக் காட்டிலும் ஓவியம் உயர்வாகிவிட்டது. எனவே இக்காம இன்பம் ஒழிக என்று சுரமஞ்சரி ஊடலால் அழுது வடித்த கண்ணீர் வெள்ளம் சீவகன் உயிரை வருத்தியது.

அலங்கல்தா தவிழ அஞ்செஞ் சீறடி யணிந்த அம்பூஞ்
சிலம்பின்மேற் சென்னி சேர்த்திச் சிறியவர் செய்த தீமை
புலம்பலர் பொறுப்ப ரன்றே பெரியவ ரென்று கூறி
இலங்குவேற் கண்ணி யூடல் இளையவ னீக்கி னானே. 2088

(சேர்த்தி-அணிவித்து; புலம்பலர்-வெறுப்பில்லாதவராய்)

யாழ்கொன்ற கிளவி யாள்த ணமிழ்துறழ் புலவி நீக்கிக்
காழின்றிக் கனிந்த காமக் கொழுங்கனி நுகர்ந்து காதல்
தாழ்கின்ற தாம மார்பன் றையலோ டாடி விள்ளான்
ஊழ்சென்ற மதியம் வெய்யோ னொட்டியொன் றாய
தொத்தான் 2089

(காழ்-விதை; கனிந்த - பழுத்த; தாழ்தல்-தங்குதல்; ஊழ் - முறை)

பச்சிலைப் பட்டு முத்தும் பவளமு மிமைக்கு மல்குல்
நச்சிலை வேற்கண்மாதர் நகைமுக முறுவன் மாந்தி
இச்சையுங் குறிப்பு நோக்கி எய்வதே கரும மாகக்
கைச்சிலை கணையோ டேந்திக் காமனிக் கடையைக் காப்பான்
2090

(மாந்தி-மாந்த, சீவகன் உண்ணும்படி; இச்சையும்-சீவகனது வேட்கையையும்)

தன் மாலையில் நிறைந்த மகரந்தம் சிந்த அவளுடைய சிவந்த அழகிய சிற்றடியில் அணிந்த சிலம்பின் மேல் தன் தலையை வைத்து வணங்கி; சிறியவர்கள் செய்த தவற்றினை வெறுக்காது பெரியோர் பொறுத்துக் கொள்வர் அல்லவா (அதுபோல் என்குறையை நீயும் பொறுத்திடுக) என்று கூறி அவள் ஊடலை நீக்கினான். இன்னிசை பொழியும் யாழினை வென்ற மொழியுடைய அவளும் அமுதை வென்ற தன் ஊடல் நீங்கினாள். விதையின்றிப் பழுத்த இன்ப வேட்கை யென்னும் நறுங்கனியை உண்டு, காதல் மணக்கின்ற மாலையணிந்த மார்புடையவனான சீவகன், சுரமஞ்சரியோடு கூடி நீங்காதவனாய், முறையால் நிறைந்த நிலவைக் கதிரவன் பொருந்திய தன்மை போலாயினான். பசிய இலைத் தொழில் நிறைந்த பட்டும், முத்தும், பவளமும் விளங்கும் அல்குலையும், நஞ்சில் தோய்த்தெடுத்த இலைவடிவான வேல்போலும் கண்களையும் உடைய சுரமஞ்சரியின் இன்முகப் புன்னகை காண விரும்பும் சீவகன் நினைவையும் அவள் குறிப்பையுங் கண்டு, அவர்களிருவரும் இணைய அம்பெய்வதே குறியாகக் கொண்டு, காமன் வில்லம்பும் கையுமாக அவ்வீட்டு வாயிலை எப்போதும் காத்து நிற்பானாயினான்.

கடிப்பிணை காது சேர்த்திச் சிகழிகைக் காதம் நாறத்
தொடுத்தலர் மாலை சூட்டிக் கிம்புரி முத்த மென்றோள்
அடுத்தணிந் தாகஞ் சாந்தி னணிபெற எழுதி யல்குல்
உடுத்தபொற் கலாபந் தைவந் தொளிவளை திருத்தி னானே
2091

(சிகழிகை-முடி; அடுத்து-சேர்த்து; தைவந்து-தடவி)

இலங்குவெள் ளருவிக் குன்றத் தெழுந்ததண் தகரச் செந்தீ
நலங்கிள ரகிலுந் தேனுங் கட்டியு நன்கு கூட்டிப்
புலம்பற வளர்த்த அம்மென் பூம்புகை யமளி யங்கண்
விலங்கர சனைய காளை வெள்வளைக் கிதனைச்
சொன்னான் 2092

(தகரம்-ஒரு வகை வாசனை மரம்; கட்டி-நேர்கட்டி யென்னும் வாசனைப் பொருள்; புலம்பு அற-குற்றங்கெட)

கருமநீ கவல வேண்டா கயற்கணாய் பிரிவல் சின்னாள்
அருமைநின் கவினைத் தாங்க லதுபொரு ளென்று கூறப்
பெருமநீ வேண்டிற் றல்லால் வேண்டுவ பிறிதொன்
றுண்டோ
ஒருமைநின் மனத்திற் சென்றே உவப்பதே உவப்ப தென்றாள்
2093

(கருமம்-யான் கூறும் காரியம் யாதென்றால்; பிரிவல் - பிரிவேன்)

(சீவகன் சுரமஞ்சரியைப் பிரியக் கருதி) கடிப்பிணையைக் காதிலணிந்து தலைமுடியில் பூசிய மயிர்ச் சாந்தின் வாசம் நான்கு காத தூரம் வீச, அழகுறத் தொடுத்த பூவிரிந்த மாலையை அணிந்து, மகரவாய் வடிவமுள்ள முத்துமாலையை மெல்லிய தோளிலே புனைந்து, மார்பை வாசச் சாந்தினாலே அழகுற மெழுகி, அல்குலின் மேலணிந்த பொன் மேகலையைத் தடவி அவளுடைய அழகிய வளையைத் திருத்தினான். வெள்ளி போல் அருவி வீழுங்குன்றிலே வளர்ந்த மணமிக்க தகர விறகின்

சிவந்த தீயில், வாசந் தரும் அகிலும், தேனும், நேர்கட்டியும் இட்டுக் கூட்டி, குற்றமற வளர்த்த புகை மணம் வீசியபடி இருக்க அழகிய படுக்கையின் மேலமர்ந்து விலங்குகளுக்கு அரசனான, சிங்கம் போன்ற காளை சீவகன் கூறுவான்: நான் சொல்லப் போவதாகிய ஒரு காரியம் அதற்காக நீ வருந்த வேண்டாம். மீன்போலும் கண்ணு டையவளே உன்னைச் சிலநாள் நான் பிரிவேன். அப்போது நீ பிரிவால் வாடாமல், எழிலைத் தாங்கி-அழகு நலம் கெடாமல் இருக்க வேண்டும். இதுவே உன் கடமைக்குரிய பொருளாகும் என்று கூறினான். சுரமஞ்சரி பெருமைக்குரியவனே நீ விரும்புவதை அல்லாமல் வேறு நான் வேண்டுவதும் இருக்கிறதோ? உன் எண்ணம் போலவே நடப்பேன், உன் விருப்பமே என் விருப்பமும் ஆகும் என்றாள்.

நாணொடு மிடைந்த தேங்கொள் நடுக்குறு கிளவி கேட்டே
பூண்வடுப் பொறிப்பப் புல்லிப் புணைநலம் புலம்ப வைகேன்
தேன்மிடை கோதை யென்று திருமக னெழுந்து போகி
வாண்மிடை தோழர் சூழத் தன்மனை மகிழ்ந்து புக்கான் 2094

(மிடைந்த-நெருங்கிய; தேம்கொள்-இனிமை கொண்ட; கிளவி-சுரமஞ்சரியின் சொல்லை; புலம்ப-தனித்து வருந்தும்படி; வைகேன்-பிரிந்திரேன்)

புரவியும் களிறு நோக்கிப் பொன்னெடுந் தேரு நோக்கி
இரவினும் பகலு மோவா தென்மகன் யாண்டை யானென்று
அழுதகண் ணீரி னாலே கைகழீஇ அவலிக் கின்ற
மெழுகெரி முகந்த தொக்குந் தாய்மெலி வகற்றி னானே 2095

(ஓவாது-இடைவிடாமல்; கழீஇ-கழுவி; அவலிக்கின்ற - வருந்துகின்ற)

ஒற்றரு முணர்த லின்றி உரைஅவித் துறுப்பி னாலே
சுற்றத்தார்க் குரைப்ப ஈண்டித் தொக்குடன் தழுவிக்
கொள்வார்

எற்றுவா ரிணைந்து சோர்வார் நம்பியோ நம்பி யென்னா
உற்றுடன் றழுத கண்ணீர் காலலைத் தொழிகிற் றன்றே 2096

(ஒற்றர்-அரசனால் ஒற்றறிய விடப்பட்டவர்கள்; உரையவித்து-தன் வாயினாலொன்றுங் கூறாமல்; காலலைத்து - காலையிழுத்து)

நாணத்தோடு கலந்து, இனிமைச் சுவையூற, மனம் நடுங்கி அவள் கூறிய இம்மொழி கேட்டு, தன் மார்பில் அணிந்த பொற்பூணின் வடு அவள் மார்பில் பொருந்திப் பதிய அவளைத் தழுவி, புனைந்த உன் அழகுநலம் கெட நானுன்னைப் பிரிந்து தனித்திருக்கமாட்டேன்; தேன் நிறைந்த மலர்மாலை அணிந்தவளே வருந்தற்க என்று கூறி; சீவகன் அவளைவிட்டு நீங்கி, வாளேந்திய தன் தோழர்கள் சூழ்ந்து வர, மகிழ்வோடு தன் இல்லம் சென்று சேர்ந்தான். குதிரைகளையும் யானைகளையும் பார்த்தும், பொன்னாலான பெருந்தேரை நோக்கியும், இரவும் பகலும் ஓயாது; என் மகன் எங்குள்ளான் என்று கேட்டு, அழுது கண்ணீர் வடித்து; அக்கண்ணீர் வெள்ளத்தால் கை கழுவி வருந்தி; எரியிடைப்பட்ட மெழுகுபோல் உருகும் தாய் - சுநந்தையை அங்கு கண்டு அவள் படுந்துயரைப் போக்கினான். ஒற்றரும் உணர்ந்து கொள்ளமுடியாத படி - வாயால் சேதி சொல்லாமல் - உறுப்பின் குறிப்பாலேயே சுற்றத்தார்க்கெல்லாம் தன் வருகையைத் தெரிவிக்க, அவரெல்லாம் ஒரு சேரத் திரண்டு வந்து தழுவிக் கொண்டு, நம்பியே, நம்பி என்று மார்பில் புடைத்துக் கொள்வாரும், வருந்தி அழுவாரும் ஆயினர். அப்படி அழும் அவர்கள் வடித்த கண்ணீர் காலை இழுத்து வழுக்குகின்ற வெள்ளமென ஓடியது.

கந்துகன் கழறக் கலலென் கடற்றிரை யவிந்த வண்ணம்
வந்தவர் புலம்பு நீங்க மறைபுறப் படுமென் றெண்ணி
எந்தைதா னிறந்த நாளின் றெனநக ரியம்பி யாரும்
அந்தமி லுவகை தன்னா லகங்குளிர்ப் பெய்தி னாரே 2097

(கழற-அழுபவர்க்கு இடித்துக் கூறுதலால்; புலம்பு நீங்க-அழுகையை அகற்ற)

செங்கயன் மழைக்கட் செவ்வாய்த் தத்தையும் மகிழ்ந்து தீஞ்சொல்
எங்கையைச் சென்று காண்மி னடிகளென் றிரந்து கூற
மங்கல வகையிற் சேர்ந்து மதுத்துளி யறாத மாலை
கொங்கலர் கண்ணி சேர்த்திக் குங்கும மெழுதி னானே 2098

(சேர்ந்து - குணமாலையை அடைந்து; சேர்த்தி - குணமாலைக்கு அணிந்து)

தீவினை யுடைய வென்னைத் தீண்டன்மி னடிகள் வேண்டா
பாவியே னென்று நொந்து பரிந்தழு துருகி நையக்
காவியங் கண்ணி ஒன்றுங் கவலல்யா னுய்ந்த தெல்லாம்
நாவியே நாறு மேனி நங்கைநின் தவத்தி னென்றான் 2099

(பரிந்து-வருந்தி; நைய-நைந்து நின்றாளாக; நாவி-புனுகு)

இவ்விதம் நாமிங்கே ஆரவாரித்தால், சீவகன் வந்திருக்கிறான் என்னும் உண்மை ஒற்றர்மூலம் கட்டியங்காரனுக்கு எட்டிவிடும் எனவே அமைதியடைக என்று கந்துக்கடன் கூற, கடலலை ஓய்ந்தது போல் வந்தவர் எல்லாம் தம் அழுகுரலை நிறுத்தி அமைதி அடைந்து முன்னே அழுததற்குக் காரணம் இன்று கந்துக்கடன் தந்தை இறந்த நாள் என்று பிறர்க்கு கூறி மிக்க மகிழ்ச்சியில் திளைத்து இருந்தனர். சிவந்த மீன் போலும் அழகிய கண்களையும் சிவந்த வாயையும் உடைய காந்தருவதத்தை சீவகனைக் கண்டு மனமகிழ்ந்து, அன்புடையவரே! இனிய மொழிபேசும் என் தங்கையைச் சென்று காண்க என்று வேண்ட, அவனும் அவளை அடைந்து, மங்கல முறையால், தேன் துளி நீங்காத மாலையும், மணம் வீசும் முடிமலர்க் கண்ணியும் புனைந்து குங்குமம் அணிந்தான். அவன் புனைந்த மங்கல அணியினை ஏற்றுக் கொண்ட குணமாலை, அடிகளே தீவினை உடைய என்னைத் தொடாதீர்கள்! நான் ஒரு பாவி என்று கூறி

விலகி நின்று அன்பாலே அழுது உருகி வாடி நின்றாள். கருங்குவளை மலர்போலும் கண்ணுடையவளே நீ எதற்கும் வருந்த வேண்டாம்! (தன்னைத் தீண்டியே சீவகன் கொலையுண்டான் என்று உலகம் பழிகூறியதால்) நான் உயிர் பிழைத்து வந்ததெல்லாம் புனுகு மணக்கும் மேனியுடையவளே உன் தவப்பயனாலேயே என்று கூறி அவளைத் தேற்றினான்.

அன்னமென் னடையு நோக்குஞ் சாயலு மணியு மேரும்
மின்னின்நுண் ணுசுப்பும் வெய்ய முலைகளு முகமுந் தோன்ற
என்மனத் தெழுதப் பட்டா யாயினு மரிவை கேளாய்
உன்னையான் பிரிந்த நாளோ ரூழியே போன்ற தென்றான் 2100

(சாயல்-தன்மை; அணி-அழகு; ஏர்-எழுச்சி)

இளையவள் மகிழ்வ கூறி யின்றுயி லமர்ந்து பின்னாள்
விளைபொரு ளாய வெல்லாந் தாதைக்கே வேறு கூறிக்
கிளையவர் சூழ வாமான் வாணிக னாகிக் கேடில்
தளையவிழ் தாம மார்பன் றன்னகர் நீங்கி னானே 2101

(விளைபொருள்-மேல் விளையுங் காரியத்தை; வேறு கூறி-துணிந்து சொல்லி; கிளையர்-சுற்றத்தார்)

அன்னம் போல் மென் நடையும்; அழகிய பார்வையும், அழகும், எழுச்சியும், மின்னலைப் போன்ற இடையும் பருத்த முலைகளும், முகமும் தோன்ற என் உள்ளத்தில் உயிரோவியமாய் எழுதப்பட்டு என்றும் நீ நிலைத்திருக்கிறாய்; என்றாலும், அன்புடையவளே நானுன்னைப் பிரிந்த ஓர் நாளும் ஓர் ஊழி போலாகும் என்று குணமாலை மனமகிழக் கூறி அவளோடு இனிமையுறத் தூங்கி அடுத்த நாள் தந்தையிடம் அடுத்து வருங் காரியங்கள் எல்லாம் தனித்தனியே எடுத்துக் கூறி, தோழர்கள் சூழ்ந்துவர, குதிரை வாங்கும் வணிகனாக வேடம் புனைந்து கொண்டு தன் மனையினீங்கிச் சென்றான்.

(சுரமஞ்சரியார் இலம்பகம் முற்றிற்று)